அறத்தின் குரல் அறிக்கை

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், வேலூர் மாவட்டம், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை நடத்திய அறத்தின் குரல் நிகழ்வு -2 இல் இன்றைய சூழலில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகிறதா? மறுக்கப்படுகிறதா? என்னும் தலைப்பில் 24.07.2019 அன்று மாலை 6 மணியளவில் கரேஞோ அரங்கத்தில் விவாத மேடை தொடங்கியது.

இன்றைய உலகில் பெண்களின் உரிமைகள் சமூகத்திலும், அரசியலிலும், பணிபுரியும் இடங்களிலும், குடும்பங்களிலும் பாதுகாக்கும் நிலையில் உள்ளதா என்றும், மறுக்கப்பட்டுக் கொண்டு வருகிறதா என்றும் விவாதிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அருட்தந்தை முனைவர் சி. அந்தோனிராஜ், இல்லத்தந்தை, தூய நெஞ்சக் கல்லூரி அவர்கள் தலைமை வகித்தார். அருட்தந்தை முனைவர் டி. மரிய அந்தோனிராஜ், முதல்வர், தூய நெஞ்சக் கல்லூரி அவர்களும், அருட்தந்தை முனைவர் பிரவின் பீட்டர், துணை முதல்வர், பிரிவு - 1, தூய நெஞ்சக் கல்லூரி அவர்களும் முன்னிலை வகித்தார்கள்.

மேலும் இவ்விவாதத்தில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது என்னும் தலைப்பு சார்பில் சு. பிரபாவதி, □□ ஆங்கிலம், பிரிவு - 1, ம. நிஷா, III ஆங்கிலம், பிரிவு - 1,ம. அருணா, II ஆங்கிலம், பிரிவு - 1, வே. ஹேமலதா, II ஆங்கிலம், பிரிவு - 1, செ. நந்தகுமார், I வணிகவியல், பிரிவு - 1, சி . மேக்லின், III வணிகவியல், பிரிவு - 1 மற்றும் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகிறது என்னும் தலைப்பு சார்பில் மு. கீர்த்திகா, II ஆங்கிலம், பிரிவு - 1, சி. மாணிக்கவேல், II வணிகவியல், பிரிவு - 1, இரா. சுகல்யா, II வணிகவியல், பிரிவு - 1, ச . ஷாலினி, II ஆங்கிலம், பிரிவு - 1, ப. இராமசந்திரன், II வணிகவியல், பிரிவு - 1, ஆ . திவ்யா,

II ஆங்கிலம், பிரிவு - 1 ஆகியோர்களும் கலந்துக் கொண்டு தங்களுடைய கருத்துகளை முன்வைத்து விவாதித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் க. மோகன்காந்தி அவர்கள் நெறியாளுகையாளராகவும், நடுவராகவும் இருந்து இன்றைய சூழலில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தாலும் சமூகம், குடும்பம், கல்வி, திரைப்படம், ஊடகம் ஆகிய நிலைகளில் பாதுகாப்பான சூழலே பெற்றுள்ளனர் என்று கூறி விவாத நிகழ்ச்சியை சிறப்புற முடித்து வைத்தார்.